ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ ராமாயண

எத்தப் பாட்டு.

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1928.

பார்வதி அண்டு கம்பெனி,
நெ. 34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை, மதராஸ்.

விநாயகபுராண வசனம்.

எக்காரியங்களும் விக்கினமின்றி நிறைவேறும் பொருட்டு சகலராலும் வழிப்பட்டுவருங் கடவுள் விநாயக பெருமாளே யாதலால் அன்னவரின் திருவிளை யாடல்களும் அவரைப் பூஜித்து முத்தியடைந்தவர்கள் சரித்திரங்களும், அவரைப் பூஜிப்பதற்குறிய சோடசம், அஷ்டோத்திரம், சகஸ்ரநாமங்கள் முதலான மந்திரங்களும் தெளிவான தமிழ் நடையில் எழுதி சகலரும் வாசித்தறியும்பொருட்டு உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூபா 4.

ஞானவெட்டியான் மூலமும்-உரையும் 1500

இந்த அருமையான நூலானது. மகா மகிமைபொருந்திய திருவள்ளுவநாயனரால் அருளிச்செய்யப்பட்டதென்று யாவரும் உணர்ந்த விஷயம்.

இதில் அடங்கியிருக்கும் விஷயங்கள்.

சரீரதத்துவம், சரியை, கிரியை. யோகம், ஞானம், பூர்ணநிலை, பொய்க்குரு, மெய்க்குரு, கருவிவரம், வாதவித்தை, மூப்பைமுடித்தல், வாசிதாரணை, ஆயுள்வளர்க்கும்விதி, கர்ப்பமுண்ணும்விதி இன்னும் பல விஷயங்கள் யதுசரித்து அவ்வவ்வழியில் நல்ல தேர்ச்சியை யடைவதற்கு யாதொரு தடையுமீராது இந்த நூல் எல்லாமதஸ்தர்களும் இதை அவசியம் வாங்கிவாசிக்கக் கூடியதே ஆகையால் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கக் கடமைப்பட்டவர்களேயென்று உறுதியாய் வினயத்துடன் சொல்லுகிறோம்.

புல் காவிகோ பயிண்டு விலை ரூபா 2 0 0

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ ராமாயண ஏத்தப்பாட்டு.

காப்பு வெண்பா.

ஸ்ரீராமாவென்றுரைக்கில் செல்வந்தழைத்தோங்கும்
ஸ்ரீராமாவென்றால் சிறப்புண்டாம்—என்னாளும்
ஸ்ரீராமர் அன்பர்களை ஆதரிப்பான்நாயேன்
துன்பத்தைத்தீர்த்தபான் துணை.

பிள்ளையாரேவாரும்
பிழைவாராமற்காரும்
காரும்பகவானே
வாரும்பெருமானே
பெருமாள்கதையை
பிசகாமல்பாட
சரமாகநின்றூர்
தசரதனார்செல்வம்
ஜெகமெங்குஞ்சொல்ல
அகம்யேறிவாழ்க
அலையாறிசூழ்ந்தார்
அயோத்திமாநகரை
வண்மையுடனாண்டு
வாழுந்தசரதனும்
வருபதாயிரத்து
வருடமேகனாகி
வாசுபுரிதிங்கள்
வட்டக்குடைநீழல்
திரமுடனுலகம் [டு
செங்கோல் தனைக்கொண்
(ஒருவதியாலொண்ணு)
ஒருமழைபொழிய
உஞ்சென்னெல்விளைய
ஓங்கிடுசுமித்திரை
ஓதுங்கோசலகை
உத்தமிமூவரும்
புத்திரனில்லாமல்
சித்தமதுநொந்து
தசரதருந்தாமும்
விசனமடைந்தாரே

(இருபதியாலொண்ணு)
இவர்குருவதிஷ்டர்
திருவடிபணிந்து
எந்தன்முனிநாதா
லமந்தனில்லையென்று
சிந்தைமிகநொந்தா
தசரதருமப்போ
தேவர்பலர்கூடி
ஆவலாய்அரக்கர்
அக்ரமத்தாலே

(மூப்பதியாலொண்ணு)
முறையால்திருமாலு
ஒருகெருடன்பேரில்
வருகுறவாலோர்கள்
வானவரோகானும்
வாழும்புவிமேலே
வரதன்தசரதற்கு
ஒருமதலையாக
உதிப்பன்புவிமீதில்
கானகத்தில்சென்று
வானரங்களாக
(நாற்பதியாலொண்ணு)
நல்லத்திருமாலும்
சொல்லியபடியே
துதிமிகுத்ததேவர்
தொல்புவியில்வந்தார்
தோன்றும்வானவர்கள்
துளபமால்சொற்கேட்டு
சுகமுடனிருக்க
சுகமுனிவதிஷ்டர்
தவனிலையில்கண்டு

(ஐம்பதியாலொண்ணு)
அரசனிடஞ்சென்று
அருந்தவமுனியும்
புத்திரகாமேட்டி
புதியயாகஞ்செய்தால்
புத்திரன்வுதிப்பான்
கர்த்தனருளாலே
கலைக்கோட்டுமுனியால்
கனல்யாகமுடித்தார்
கனவைகுந்தநாதன்
காணவேயுதித்தார்
(அறுபதியாலொண்ணு)
ஆதிசேடனுகும்
அரியலட்சுமணராய்
ஆழிதிருசங்கும்
பரதசத்துருவாய்
பாங்குடன்வுதித்தார்

மாலறும்வயதில்
பலகலைபடித்து
பாங்குபெருராமர்
பகரும்விஸ்வாமித்திரர்

(எழுபதியாலொண்ணு)
யேகிபின்சென்று
இந்தவனந்தன்னில்
வந்ததாடகை
வலுமையுடன்வென்று
வருகும்வழிதன்னில்
வகலிகைதன்சாபம்
இவர்அடியினல்யெழுப்பி
வன்னகர்மிதிலை
கன்னகர்அடைந்து
(எண்பதிபாலொண்ணு)
இயல்புடனேவில்லை
நயமுடன்வளைத்து
இன்பமொழிச்சீதை
அன்புடன்மணந்து
அந்தவழிதன்னில்
வந்தபரசுராமர்
வல்லமையடக்கி
வில்லையும்ஒடித்து
அயோத்திமாநகரில்
வாழ்ந்திருந்தநாளில்
(தொண்ணூருடலொண்ணு)
சொன்னதசரதனும்
மன்னன்ஸ்ரீராமனுக்கே
மணிமுடிதரிக்க
மனிதண்ணியிருக்க
மனக்கபடுகூனி
மாயத்தையரிந்து
மாதவிகைகேயி
போதனைகளாலே
சேதியையுரைத்தாள்

ஈ-பிள்ளையாரேவாரி
பின்னுமந்தக்கூனி
கைகைபுத்தியைக்கலத்து
உன்மகன்பரதர்க் [ணே
கென்செய்குவாய்பெண்
என்னடிபோவென்று
அன்னவள்கைகேசி
மன்னவனேநோக்கி
வந்தனைச்செய்தாளே
அந்தஈகைதானும்
(ஒருபதியாலொண்ணு)

உன்மகன்பரதன்
தன்முடிதரிக்க
தாரும்வரமென்றுள்
தீரமுடன்கைகை
தசரதன்திகைத்து
சிந்தையில்மயங்கி
தியங்கிபேயிருந்தாள்
தெரிவைகைகைதானும்
ஸ்ரீராமரையழைத்து

(இருபதியாலொண்ணு)
இப்பதிலைலாண்டு
ஒப்புடன்வனத்தில்
ஒருமையுடன்போக
அருமைலட்சுமணரும்
அணிகுழலாள்சீதை
அனைவரும்வனத்தில்
இனமுடன்திரிந்தார்
இந்தவகையாலே
ஈன்றதாய்கோசலை
(மூப்பதியாலொண்ணு)
மூவர்தாயிமாரும்
முகத்தில்கண்ணீர்சோர
முதல்வன்தசரதனும்
முகுந்தன்பதிசென்றார்

முகில்வண்ணன்பரதன்
நகரயோத்திநீங்கி
நல்லாதமேரி
நதிக்கரையில்வந்து
நற்குகனைக்கண்டு

(நாற்பதியாலொண்ணு)
நல்லநதிகடந்து
நல்லசித்திரகூடம்
நாடியேபரதன்
ராமனைப்பணிந்து
தந்தையும்யிறந்த
தக்கசேதிசொன்னான்
அயோத்தியையாளும்
அண்ணனேநீவாரும்
அன்னைசொற்படியே
(ஐம்பதியாலொண்ணு)
அன்னரசையாள்வாய்
அன்புடன்பரதர்
அரியராகுராமர்
அவ்வனத்தைநீங்கி
விராடனையேகொன்று
தண்டகவனத்தில்
சேர்ந்தராகுராமர்
செங்கனிகளுண்டு

அகஸ்தியனைக்கண்டு
அப்புவில் லுங்கொண்டு

(அறுபதியாலொண்ணு)
அவ்வனத்தைவிட்டு
சுந்தரச்சடாயுவை
சுகமுடனேகண்டு
துரிதமாய்நடந்து
கோதாவரிதாண்டி
லட்சுமணர்செய்த
பஞ்சவடிதன்னில்
ஸ்ரீராமருமிருந்தார்
(எழுபதியாலொண்ணு)
இளையபெருமாளும்
காய்கனிகொடுக்க
ராமன்சீதையுண்டு
நலமுடனிருந்தார்
சூர்ப்பநகைவந்தாள்
ராமனையேகண்டாள்
சோபனஞ்செய்யென்றுள்
சூர்ப்பநகைமூக்கை
தொட்டரிந்தான் மன்னன்
(எண்பதியாலொண்ணு)
எழுந்தலரியோடி
விழுந்தசூர்ப்பநகை
கரதூஷணரோடு
கலங்கியுரைத்தாள்
கரதூஷணரும்
கடுஞ்சமர்புரிந்து
ராமர்கையால்மாண்டார்
மாயைசூர்ப்பனகை
ராவணனைக்கண்டாள்

(தொண்ணூருடலொண்ணு)
தோகைசூர்ப்பநகை
பாடுமொழிச்சீதை
பர்ணசாலைதன்னில்
கன்னிகையழகை
காணமுடியாது
கண்டுவந்தேன்நாளும்
மானிடர்யிருவர்
மானம்குலைத்தாரே
மங்கைசொல்கேட்டு
உரப்பிள்ளையாரேவாரி
பின்னும்ராவணனும்
கன்னிசீதைதன்னை
காணவேணுமென்று
காதல்மிகக்கொண்டு
மாமன்மாரீசன்

மானுகப்போவென்றுன்
ராமன்கண்ணெதிரில்
மாயமானும்நிற்க
மாதுசீதைக்கண்டு

(ஒருவதியாலொண்ணு)
ஓடிவந்தமானை
தேடித்தாரும்யென்றுள்
சீதையவள்தானும்
ராமரும்யெழுந்து
நேமமாய்பொன்மானை
நோகத்தெரித்தி
நெடியபாணம்விட்டார்
லட்சுமணாவென்று
அட்சணமேமானும்

(இருபதியாலொண்ணு)
இப்படிவிழவே
இந்தசொல்லைக்கேட்டாள்
அந்தசீதைதானும்
இளையபெருமாளை
எழுப்பியேயனுப்ப
ராவணனும்அப்போ
வேருருவம்கொண்டு
தேரோரியேவந்து

ஆரம்மணியென்றுன்
அயோத்தியையாளும்

(மூப்பதியாலொண்ணு)
முனிவர்பெரியோரே
முகுந்தனுடதேவி
சானகியென்பேரு
தவமுனியேகேளும்
யிவ்வனந்தனிலே
யெழுந்தமுனியோரே
எங்குவந்தீரென்ன
மங்கைசீதைகேழ்க்க
இலங்கையரசாளும்
ராவணனினென்றுன்
(நாற்பதியாலொண்ணு)
நாதன்வரும்முன்னே
பாதகாபோவென்றுள்
பாதகராவணன்
கட்டுகதையிங்கே
காட்டபயமாமோ
கடுகினிலத்தோடே
கன்னியையெடுத்து
கனகதேரில்வைத்து
காதகன்சென்றுனே
(ஐம்பதியாலொண்ணு)

அரக்கன்தேரிலேறு
அணங்குசீதைதானும்
அந்தரத்தில்போக
சுந்தரச்சடாயும்
தோற்மைதுகண்டு
தடங்கி சண்டையிட்டா
துஷ்டராவணனும் [ன்
வெட்டியேகெலித்தான்
இஷ்டமாஞ்டாயும்
இவ்வனத்தில்வீழ

(அறுபதியாலொண்ணு)
அரக்கன்ராவணனும்
அணங்குசீதைதன்னை
அசோகவனந்தன்னில்
அருஞ்சிறையில்வைத்தா
அணிதிருச்சடையும் [ன்
துணையாகயிருந்தாள்
துதிமிகுத்தசீதை
மதியதனையேத்த
மதுவனம்அசோக
வனந்தனிலிருந்தாள்
(எழுபதியாலொண்ணு)
இளையபெருமாளும்
இராமரைப்போய்கண்டு
இருவரும்கடந்து
மருவிபர்னசாலை
சீதையைக்காணுமல்
தேடிமனம்நொந்து
திகைத்துவரும்போது
சேதியைச்சடாய்வு
போதனைகள்செய்தார்

(எண்பதியாலொண்ணு)
சென்றராகுராமர்
சென்றவனம்விட்டு
சவுரியாளுரைத்த
தனிவழியேபோனர்
சாரும்அனுமானும்
நேராகவந்தான்
ஐயன்அதுகண்டு
ஆரும்பிள்ளாயென்றான்
அஞ்சனைதேவிக்கி
அனுமபுத்திரன்நானே

(தொண்ணூருடலொண்
சுக்கிரீபன்வுங்கள் [ணு
தோத்தமதைகண்டு
துரிதமாகயென்னை
தூதனுப்பவந்தேன்

சொன்னசொல்லைக்கேட்டு
மன்னன்ரகுராமன்
சீதையைப்பிரிந்த
சேதியையுரைத்தான்
300-பிள்ளையாரேவாரி
பின்னுமனுமானும்
பெரியரூபம்காட்டி
சுக்கிரீபனைக்கண்டு
தெசரதகுமாரர்
ஜெயமிகுந்தாயர்
சேவித்துநீர்வாரும்
சேதியையுரைத்தேன்
ஆதியனும்மானும்

(ஒருவதியாலொண்ணு)
வோங்கியேசுக்ரீபன்
பாங்குபெரவந்த
பாரளந்தமாயன்
பாதமேபணிந்து
வாலிசெய்யுந்தங்கை
வகையுடனேசென்றுன்
வந்தாமச்சந்திரன்
வாலிதனைக்கொன்று
கிஷ்கிந்தைநகரை
சுக்கிரீபன்ஆள

(இருபதியாலொண்ணு)
இந்தவானரங்கள்
எழுவதுமேவெள்ளம்
யெங்குநிரைந்தாரே
மதங்கம்மாமலைமேல்
வந்தபின்புராமர்
சொந்திருவாள்சீதை
சேதியையரிய
செய்வீர்கள்போக
தென்திசைக்கனுமன்

(மூப்பதியாலொண்ணு)
மோதிரம்கையேந்தி
விஸ்வரூபம்கொண்டு
வேகமாய்கடலை
மைனகமலைதாண்டி
மாகரிலங்கை
வாசல்வழிவந்து
யிலங்கனியைகொன்று
யிலங்கையில்புகுந்து
யிலங்கையெங்குந்தேடி

(நாற்பதியாலொண்ணு)
நாடியனுமானும்
தேடித்திரிந்தானே
அசோகவனந்தன்னில்

அணிகுழலாள்சீதை
அன்புடன்யிருக்க
அனுமானும்பணிந்தே
கணையாழிகொடுத்தான்
களிப்புடனேசீதை
கணவனைநினைந்து
கண்ணில்நீர் சொரிந்தாள்

(ஐம்பதியாலொண்ணு)
அவ்வரவைசொல்லி
அன்னை துயர்மாத்தி
அந்தசீதைதந்த
அடையாளங்கள்வாங்கி
அனுமாரும்திரும்ப
அசோகவனந்தன்னை
அழித்துவரும்நாளில்
அந்த தூதர்கண்டு
அரக்கனேடேசொன்னர்
(அறுபதியாலொண்ணு)
அரக்கன்ராவணனும்
அனுப்பியிந்திரசித்தை
அனுமனைதண்டை
நாகபாசத்தாலே
நலமுடனேகட்ட
நற்கெருடனாலே
நாகமதுசாக
ஆடாதீயென்று
அரக்கர்துகேழ்க்க
ராவணத்துரும்பே
ராமதூதனானே

(எழுபதியாலொண்ணு)
எம்பேருஅனுமான்
ஈனப்புத்தியாலே
மானமில்லாதுரோகி
மாதுநீதிருட
நீதியோவுனக்கு
நீபிழைப்பதில்லை
நில்லடாகைகுத்தில்
வல்லமைராவணு
சொல்லடாதீயென்றான்
தூதனனுமானும்
(எண்பதியாலொண்ணு)
என்னசொன்னாய் தூதாய்
என்றவனைமூந்து
அந்தஅனுமானை
வாலினில்கொளுத்த
வணிகுழலாள்சீதை
வாலைமகளுத்தாமல்
வக்கினியைவேண்ட

வளமிகுத்தலங்கை
வனுமந்தன்தியிட்டான்

(தொண்ணூருடலொண்
தஷ்டராவணனுக்கு[னு
இஷ்டமானலங்கை
நட்டமேயடைய
நல்ல அனுமானும்
சீதைதிசைநோக்கி
சேவித்துபணிந்து
தென்திசைக்குபோன
செயமிகுத்ததுதன்
திரும்பியேவந்தானே
ராமரைக்கண்டானே
சேதியைச்சொன்னானே
400-பிள்ளையாரேவாரி
பிரியமுடன்சீதை
பெரிபதோர்வனத்தில்
அரியகணையாழி
அன்புடன்கொடுத்தாள்
பரிவுடனேராமர்
பாதமேபணிந்து
பார்த்துவந்தேனென்று
கணையாழிகொடுத்தான்
காளை அனுமானும்

(ஒருவதியாலொண்ணு)
ஒருமிக்கவேகூடி
ஒருகடல்கரையில்
வந்துநின்றுர்ராமர்
வானரங்களோடு
வாரெல்லாமரிந்து
போரரக்கன்தானும்
பெரியமந்திரியோடு
பேசியேயிருந்தார்

(இருபதியாலொண்ணு)
யிருந்தவிபூஷணர்
அரிந்தரக்கன்நெஞ்சை
வருந்தியேஜானகியை
அருஞ்சிறைவிடென
அரக்கனுங்கோபித்து
அவளைவிடேனென்றுன்
அரக்கனுரைத்தானே
அப்போவிபூஷணர்
அரக்கனேயேநீக்கி
ராமரைப்பணிந்தார்
(மூப்பதியாலொண்ணு)
மூகுந்தன்ரகுராமர்
திருவணையைகட்டி
திருக்கடலேத்தாண்டி

ஜெயமிகுத்தராமர்
வானரப்படையும்
வாக்கன்கோவிலேற
அரக்கரதுகண்டு
அலியயுத்தஞ்செய்தான்
வானரங்களோடு
வரதன்ராமன்கண்டு

(நாற்பதியாலொண்ணு)

கல்லாகுராமர்
வல்லயுத்தஞ்செய்தார்
பாவிராவணனும்
படையெடுத்துவந்து
பாரயுத்தஞ்செய்தார்
பாங்குடன்பெருராமர்
பலகணைதொடுத்து
பாணத்தாலரிந்தார்

(ஐம்பதியாலொண்ணு)

அந்தராவணனுக்
கழுகுதேரும்போச்சி
அந்தராவணனும்
ஐயகெதிர்நின்றான்
இன்றுபோய்நீராளை
யினிவருவாய்நீயே
என்றுரைத்தராமர்

(அறுபதியாலொண்ணு)

அரக்கனேடிவந்து
அனுப்பியிந்திரசித்தை
அவனுஞ்சண்டையிட்டார்
அந்தராமரோடு [ன்
கும்பகர்ணன்வந்து
கூடச்சமர்செய்தான்
ஜெயமிகுத்தராமர்
சேனைகளைகூட்டி
ஒருகணையிலேலே
ஓங்கிஅடித்தாரே

(எழுபதியாலொண்ணு)

யிவர்கள்மாண்டசேதி
ராவணனுங்கேட்டு
மூலபலசண்டை
முன்னரக்கன்செய்தான்
மன்னன்ராமர்கண்டு
மாபடையைக்கூட்டி
மண்டலம்நடுங்க
விண்டலம்குலுங்க
அந்தராவணனை
அரியதலைபத்தும்
அந்தராமர்கொய்தார்

(எண்பதியாலொண்ணு)
எங்கள்விபூஷணர்க்
கிலங்கைப்பட்டங்கட்டி
இருந்துஅரசாண்டார்
சீதையோடுராமர்
சேர்ந்துவருங்காளில்
சேதுவையைக்கண்டு
செய்தவிருந்துண்டு
செயம்பெறஅனுமான்
சேதிவந்துசொன்னன்

(தொண்ணூருடலொண்
சொற்பரதன்கேட்டு [ணு
தாய்மாருக்குறைக்க
தாங்களுங்களிக்க
அயோத்திமாநகரில்
அனேவர்களும்வந்தார்
அரியாசனராமர்
அன்புடன்யிருக்க
ஆசனம்கொடுக்க
அன்புடன்பரதன்
அனேவர்களுஞ்சூழ
பட்டாபிஷேகமும்
பாங்குடனேசெய்தார்
ராமர்லட்சுமணற்கும்
ஜானகிதாயார்க்கும்
சகலரும்பணிந்தார்
சீதைராமன்வாழ்க
ஜெகத்திலுள்ளோர்வாழ்
நம்பினபேர்வாழ்க [க
நாடுகள்செழிக்க
நல்லமழைபொழிய
ராமர்கதைமுற்றும்
நலமுடனேவாழி.

ஸ்ரீராமாயண ஏத்தப்பாட்டு

முற்றிற்று.

சுப்பிரமணியர் வசியமென் னும்

முருகத்தியானம்.

இக்கலியுகத்தில் பிரத்தியகூ தெய்வமாயும் வேண்டி னோர்க்குவேண்டியவற்றை கொடுக்கக்கூடியவராயும் விளங்கி யிருக்கின்றவர் சாகூாத் முருகக் கடவுளாகையால் அவ ரைப் பூஜித்து முத்தியடைவதற்கு இந்தநூலே மிகச்சிறந்த தாகும். இதிலடங்கியிருக்கும் விஷயங்களாவன:—

விநாயகக்கடவுள் பூஜாவிதி சோடசநாமங்கள் அஷ் டோத்ர நாமங்கள். விநாயகர் பூஜாயந்திரம் ரிஷி சந்தஸ் நியாசத்துடனும், முருகர் பஞ்சகம், முருகர் அஷ்டோத்ரம், முருகர்திரிசதி, நாமாவளி, முருகர் திருவழுகு தோத்திரம், சடாக்ஷரமாறல் யந்திரங்களுடன், சமுதாயமாறல், முருகர் பூஜாயந்திரம் ரிஷிசந்தஸ் நியாசத்துடன். கந்தர் கவசம் கந் தர் அனுபூதி, கந்தர்சஷ்டி கவசம், கருணைமாலை சாணப் பத்து, ஜீவசாக்ஷிமாலை, மாதப்பதிகம், வாரப்பதிகம் இன் னம் அரிய தோத்திரங்களுமடங்கி யிருக்கின்றன.

இதன் விலை அணு 4.

கோராகும்பர் சரித்திரம்.

இந்து பண்டாரநாதாருள்பெற்று முத்தியடைந்து பக் தர்களில் ஒருவரது திவ்யசரித்திம். இதைவாசிப்போர்க்கு தான் அதனுடைய அருமைவிளங்கும். இவரது பக்தியும், வை ராக்கியமும், இவர் பண்டாரநாதனை தரிசனஞ்செய்து அவ ரால் இழந்துபோன தன்குழந்தையையும் வெட்டுண்ட தன் கரத்தையும் மீளயடைவதும் ஆகிய இவரது சரித்திரத்தை கோத்தனைகளாகவும் வசனங்களாகவும் அச்சிடப்பட்டிருக்கி றது.

விலை அணு 0 5 0

ஒரு புஸ்தகம் வி. பி. யில் அனுப்பமுடியாது வேண் டியவர்கள் புஸ்தகத்தின் கிரயத்திற்கு ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்டில் புஸ்தகம் அனுப்பப்படும்.

ரூபாவதி

அல்லது

சிதம்பர சாமியார்.

(இது ஓர் நூதன துப்பறியும் தமிழ் நாவல்.)

இதில், கதாநாயகியாகிய ரூபாவதியிடமிருக்கும் இரகசிய கடிதத்தை மேகநாதப் பிள்ளை யென்பவன் கைக் கொள்ள எண்ணி, மகாயோகிபோல் நடித்து வஞ்சனைத் தொழில்களையே மேற்கொண்டு திரியும் சிதம்பர சாமியாரின் உதவியினால் அக்கடிதத்தைப்பெற அந்த ரூபாவதியையே விவாகஞ் செய்துகொள்ள முயலுவதும், ஒரு நாள் திடீரென்று ரூபாவதியும் இரகசிய கடிதமும் காணுமற் போவதும், பிறகு துப்பறியும் நாகலிங்கம் சிதம்பர சாமியார் பாதாள அறையில் அநேக கஷ்டங்களை அனுபவிப்பதும், கடைசியில் நாகலிங்கன் சிதம்பர சாமியாரை செங்கற்பட்டிலுள்ள ஒரு ஓட்டலில் கண்டு பிடித்து அவ்வஞ்சகனிடத்திலிருந்த இரகசிய கடிதத்தை வாங்குவதும், சிதம்பர சாமியார் உடனே தற்கொலை புரிந்து கொள்ளுவதும் ஆகிய பற்பல விஷயங்கள் மிகு அருமையாக அமைக்கப்பட்டுள்ளது. இடை இடையே துப்பறியும் நாகலிங்கன் சாமர்த்தியங்கள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தக் கூடியது. அதிலும், மேற்சொன்ன சம்பவங்களன்றி உடனுக் குடனே மனம் திடுக்கிடக் கூடிய ஆச்சரியகரமான கோரக் கொலைகளும் கோர்ட்டின் விசாரணைத் தீர்ப்புகளும், ரூபாவதி முடிவில் தான் காதலித்த நாயகனையே மணம் புரிவதும், அநேக சம்பாஷணைகளும் பொருந்தியிருப்பது மிகவும் வியக்கத்தக்கதேயாகும்.

இதன் விலை அணா 0 12 0